பக்கங்கள்:-14


# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 22 | திங்கட்கிழமை | 07.08.2023 | அதிர்வு 06

## ஹட்டனில் தன் வீட்டில் கஞ்சா வளர்த்தவர் கைது

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தரவளை தோட்டத்தில் கஞ்சா செடியை வளர்த்த சந்தேக நபர் ஒருவரை, ஹட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹட்டன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபரின் 03▶



## 13க்கான யோசனையை தமிழ்க் கூட்டமைப்பாக வைக்க தமிழரசு முயற்சி

கொழும்பு, ஒகஸ்ட் 07

அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் தொடர்பான யோசனைகளை கட்சிகள் முன்வைப்பதற்கு ஒகஸ்ட் 13ஆம் திகதி வரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கால அவகாசம் வழங்கியுள்ள நிலையில், அது தொடர்பான தங்கள் தரப்பு யோசனையை ரெலோ, புளொட் ஆகியவற்றுடன் இணைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக முன்வைப்பதற்கான எத்தனத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முனைப்பாக இருப்பதாகத் தெரிய வருகின்றது. 03▶

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழரசுடன் சேர்ந்து முன்வைக்க முயற்சி

அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் தொடர்பான தமது யோசனைத் திட்டத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனும் சேர்ந்து ஒரே ஆவணமாக முன்வைப்பதற்கு முயற்சிப்பது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் தீர்மானித்திருக்கின்றது. 03▶

## பொலிஸ் அதிகாரத்தை பகிர்வது அச்சம் தரும்!

### அமைச்சர் அலிசப்ரி கூறுகிறார்



மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது நாட்டுக்கு அச்சமான நிலைமையை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி நாடாளுமன்றின் ஊடாகவே இறுதி தீர்மனம் எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு 02▶

## வேலன் சுவாமிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணை ஒருங்கிணைப்பாளரான தவத்திரு வேலன் சுவாமிகளை இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு 07▶

## இலங்கை வருகிறார் சச்சின் டெண்டுல்கர்





பிரபல முன்னாள் கிரிகெட் வீரரும், யுனிசெவ் நிறுவனத்தின் தெற்காசிய பிராந்தியத்தின் பிரதிநிதியுமான சச்சின் டெண்டுல்கர் இலங்கை 07▶

## மகரகம விபத்தில் தாயும் மகளும் பலி

கொழும்பு – மகரகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வாகன விபத்தில் தாயும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு இந்த விபத்தில் தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டள்ளது.

பாரவூர்தி ஒன்றும், கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் காரில் சென்றவர்கள் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காரைச் செலுத்திச் சென்ற 27 வயதுடைய இளம் பொறியியலாளரும், முன் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 55 வயதுடைய அவரின் தாயாரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 02▶

## இரகசியம்



பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் – 2005இல் ஜனாதிபதி தேர்தலில் இலகுவாக வெற்றி பெறத் தமக்குக் கிடைத்த வாய்ப்பை ரணில் விக்கிரமசிங்க எப்படிக் கோட்டை விட்டார் என்பது தொடர்பில் என்னோடு 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பந்தப்பட்ட விடயங்களை கடந்த நான்கு நாள்களாகப் பகிர்ந்து வருகிறேன். இன்றோடு அந்த விடயத் தொடருக்கு முடிவு கட்டலாம் என நினைக்கிறேன்.

அந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தம்மால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் ஓர் அரசியல்வாதியாக முழுமூச்சுடன் மேற்கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ.

சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளின் ஆதரவையும் உச்சபட்சமாகப் பெறுவதற்காக எந்த எல்லை வரை போக வேண்டுமோ அதுவரை அவர் போனார்.

ஆதரவு தருவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு அவர் ஏற்றுக் கொண்டார். நிபந்தனைக் கடிதங்களில் அல்லது ஆவணங்களின் எந்த மறுப்பும் இன்றி ஒப்பமிட்டார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அந்தத் தேர்தலோடு முடித்து விட வேண்டும் என்று ஜே.வி.பி. விதித்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு அது தொடர்பான ஆவணத்தில் ஒப்பமிட்டு, உறுதி கூறி, ஜே.வி.பியின் ஆதரவைச் சுருட்டிக் கொண்டார். அதேபோல பௌத்த பிக்குகளின் ஹெல உறுமய கொண்டுவந்த நிபந்தனைகளையும் ஏற்று ஆவன செய்வார் என்று ஒப்பமிட்டு உறுதிக் கடிதம் கொடுத்தார். அவரைப் பொறுத்தவரை தேர்தலில் தரப்புகளின் ஆதரவைப் பெறுவதற்காக எந்தக் கோரிக்கையை ஏற்பதாகவும் வாக்குறுதி அளிக்க அவர் தயாராக இருந்தார். 'முதலில் தேர்தலில் வெல்வோம், அதுதான் முக்கியம். வென்ற பின்னர் விடயத்தைப் பார்க்கலாம்' என்பதுதான் அவரது ஒரே இலக்காக இருந்தது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவர் பிரத்தியேகமாக சிறுபான்மையினரின் – குறிப்பாக தமிழர்களின் – வாக்குகளை நம்பி இருந்த போதிலும், அதற்காக ஒரு வாக்குறுதியை அளிக்காமல் பின் நின்று, அதனால் முழுத் தேர்தலையுமே கோட்டை விட்டார் என்பதுதான் என் கணிப்பீடு. அதுவே நிஜத்தில் நடந்தது.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக அதிகார சபை பற்றிய யோசனைத் திட்டத்தை அவர்களுக்குச் சார்பாகப் பரிசீலிப்பார் என்ற ஒரு கடிதத்தில் ரணில் ஒப்பமிட இணங்கி இருந்தால், அந்தத் தேர்தலில் அவரின் வெற்றி நிச்சயம் உறுதியாக இருந்திருக்கும்.

தனது கோணங்கித்தனமான முடிவினால் – போக்கினால் – அதற்கு மறுத்து, வெற்றி வாய்ப்பையும் அவர் கோட்டை விட்டார்.

முரசு நாளிதழை வெளியிடும் 'ஏ வன் மீடியா' நிறுவனத்தின் நிர்வாகி தனராஜ் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த விடயம் குறித்து தமது தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாகக் கேட்டார்.

"இப்படி ஒரு ஒரு கடிதத்தை வழங்கும்படி புலிகள் தரப்பில் கோரப்பட்டது என்றும், ஆனால் புலிகளின் ஆதரவின்றியே அந்தத் தேர்தலில் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையில் நீங்கள் அத்தகைய கடிதத்தை வழங்க மறுத்து, கடைசியில் அத்தேர்தலில் தோல்வியைத் தழுவுனீர்கள் என்றும் ஒரு பத்திரிகையாளர் கூறுகிறாரே. அது உண்மையா?" – என்ற சாரப்பட தனராஜ் கேள்வி எழுப்பினார்.

அதற்கு "ஆம். உண்மை. இப்படி ஒரு கடிதம் கோரப்பட்டது. புலிகளின் ஆதரவின்றி வெற்றி பெறலாம் என்பதற்காக அக்கடிதத்தை நான் வழங்க மறுத்தேன் என்பது தவறு. நாட்டின் அரசமைப்பின் கீழ் அத்தகைய விடயத்தை நான் வழங்க முடியாது என்பதால் அப்படி ஓர் உறுதி மொழியை வழங்க நான் விரும்பவில்லை. அதனால்தான் அத்தகைய உறுதிமொழிக் கடிதத்தை வழங்க மறுத்தேன்" – என்ற சாரப்பட பதில் தந்தார் ரணில் விக்கிரமசிங்க.

எது, எப்படியோ, என் முயற்சி – என் பங்களிப்போடு – இவ்விடயம் அவ்வளவு தூரம் முன்னாடி நகர்ந்து வந்ததை ரணில் விக்கிரமசிங்க மறுக்கவில்லை. இப்போதும் மறந்திருக்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

இந்தத் தேர்தல் சம்பவங்கள் எல்லாம் நடந்து முடிந்து, மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வென்று, பதவியேற்று, ஓரிரு மாதங்களில் தலைவர் பிரபாகரனை சமரச பேச்சு முயற்சிக்கு அழைக்கும் எத்தனமாக தனது செய்தி ஒன்றை தலைவருக்கு எடுத்துச் செல்ல என்னைக் கேட்டுக்கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ.

அச்சமயம் அலரி மாளிகையில் மஹிந்த ராஜபக்ஷவோடு நட்புறவுடன் சில விடயங்களை மனம் திறந்து பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

நடந்து முடிந்த 2005 ஜனாதிபதித் தேர்தல் முடிவு தொடர்பில், தேர்தலுக்கு முன்னர் புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வன் வெளியிட்ட கணிப்பீட்டை நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் அச்சமயம் பகிர்ந்து கொண்டேன்.

"தாங்கள் தங்கள் தமிழ் மக்களை வாக்களிக்கக் கோரினால் ரணில் விக்கிரமசிங்க 3 லட்சம் வாக்குகளால் வெற்றி பெறுவார் என்றும், தாங்கள் தேர்தலை பகிஷ்கரிக்கத் தமிழ் மக்களைக் கோரினால் ரணில் விக்கிரமசிங்க 2 லட்சம் வாக்குகளால் தோற்பார் என்றும் தமிழ்ச் செல்வன் என்னிடம் கூறினார்" என நான் மஹிந்த ராஜபக்ஷவிடம் அப்போது சொன்னேன்.

அப்போது மஹிந்தர் குறுக்கிட்டார்.

அந்த ஜனாதிபதி தேர்தல் நடந்த சமயம் பதவியில் இருந்த ஜனாதிபதி சந்திரிகா. மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்தார். அதனால் அரச புலனாய்வுத் துறையின் தொடர்புகள் தேர்தல் வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருந்தது.

"ஆம். தேர்தல் முடிவுகள் தொடர்பில் புலிகள் இவ்வாறு கணிப்பீடு செய்திருக்கின்றார்கள் என்ற தகவல் எங்களுக்கும் அப்போதே கிடைத்தது. அவர்களின் கணிப்பீடு அச்சொட்டாகச் சரி என்பது பின்னர் தேர்தல் முடிவுகள் வந்த போது நிரூபணமாயிற்று. கிழக்கில் கருணாவின் மட்டக்களப்பு பிரதேசத்தில் விடுதலை புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பு நடவடிக்கை முழு அளவில் நடைமுறைப் படுத்தப்பட முடியாமல் போயிற்று. அதனால் அந்தப் பிரதேசத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சுமார் 20 ஆயிரம் வாக்குகள் விழுந்தன. அதன் காரணமாகப் புலிகள் மதிப்பிட்ட 2 லட்சம் வாக்குகள் வித்தியாசம் என்பது ஒரு லட்சத்து 80 ஆயிரம் ஆகக் குறைந்தது. நான் ஒரு லட்சத்து 81 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். புலிகளின் கணிப்பீடு துல்லியமானது என்பதை ஏற்றுக் கொள்கிறேன்." – என்று ஒரு வியப்போடு கூறினார் மஹிந்த ராஜபக்ஷ.

இந்தத் தகவல்களோடு இந்த விவகாரத்தை இன்றோடு முடிப்போம். நாளை புதிய விடயத்தை உங்களோடு பகிர எதிர்பார்க்கிறேன்.

## பொலிஸ் அதிகாரத்தை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

வழங்குவது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பில் எமக்கு தமிழ் மக்களுடன் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் தற்போதைய நிலையில் பொலிஸார் அரசியல் மயமாகியுள்ளனர் எனப் பொதுமக்கள் பாரிய குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள்.

அவ்வாறானதொரு நிலையில் மாகா ணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது பொருத்தமற்றதாகும். ஏனென்றால் ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பது முதலமைச்சர் இருப்பார்கள்.

அவர்கள் வெவ்வேறு கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்பவர்களாகவே இருப்பார்கள். பொலிஸ் அதிகாரத்தினை மாகாணங்களுக்கு வழங்குகின்ற போது அந்த முதலமைச்சர்களே பொலிஸாரை நிர்வாகம் செய்யும் நிலைமையே காணப்படும்.

தற்போது தேசிய ரீதியில் ஒரு பொலிஸ் கட்டமைப்பே காணப்படுகின்றது. இதன்போதே பொலிஸ் கட்டமைப்பு மீதான குற்றச்சாட்டுகள் இருக்கின்ற நிலையில் ஒன்பது மாகாணங்களும் பொலிஸ் அதிகாரத்தை கையாளும் போது நாட்டின் நிலை என்னவாகும் என்ற கேள்வி ஏற்படுகின்றது.

ஆகவே, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதானது அச்சமான நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே, மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதித்தே இறுதி தீர்மானம் எடுப்பது பொருத்தமானதாகும். – என்றார்.

## மகரகம விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 58 வயதுடைய தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாரவூர்தியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார் விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இயற்கை நீதியின் நியாயாதிக்கம்

மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் இலங்கை, அதனால் தான் பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது. அதிலிருந்து மீள்வதற்கான பகீரதப் பிரயத்தன முயற்சி இப்போது மேற்கொள்ளப்படுகின்றது.

அதில் முக்கியமானது - பிரதானமானது - பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கான முறைமை ஒன்றை வகுத்துக் கொள்வதாகும். அதற்கான முயற்சியே இப்போது முனைப்போடு முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டின் கடன் மீளச் செலுத்துகைக் கடப்பாடு இரண்டு வகையானது. முதலாவது - வெளிநாட்டுக் கடன். அடுத்தது - உள்நாட்டுக் கடன்.

முதலாவது விவகாரம் - கடன் வழங்கிய சர்வதேச நாடுகளுடனும் தரப்புகளுடனும் சர்வதேச நிறுவனங்களுடனும் பேச்சு நடத்துவதன் மூலம் முன்னெடுக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது.

அடுத்தது - உள்நாட்டுக் கடன் கடப்பாடுகள். பிணைமுறியாகவும், பிற வழிகளிலும், பெருந்தொகை கடன்களை தனி ஆள்கள், பொது நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் மற்றும் வங்கிகளிடமிருந்து அரசு வாங்கிக் குவித்திருக்கின்றது. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றில் சேமிக்கப்பட்ட பல லட்சம் கோடி ரூபாக்களையும் கடந்த கால அரசுகள் கடன் என்ற பெயரில் வாங்கி சுவாஹா செய்து விட்டன.

இக்கடன்களின் மீளளிப்புத் தொடர்பான மறுசீரமைப்பின் போது தனியாள்கள், பண முதலைகள் மற்றும் செல்வாக்குச் செலுத்தும் நிறுவனங்களிடமிருந்து பிணைமுறி மற்றும் பிற வடிவங்களில் பெறப்பட்ட கடனை அப்படியே பாதிப்பின்றி - பின்னடைவுகளின்றி - மீளச் செலுத்தவும் -

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற சமூக நிதியங்கள் தொடர்பான கடப்பாடுகளை வட்டியைக் குறைத்து, மீள்ளிப்பை நீண்ட காலத்திற்கு இழுத்து, கடன் பொறுப்புப் பாதிப்புகளை அந்தக் கடன் வழங்குநர்கள் மீது கட்டிவிடும் திட்டத்தை அரசு கட்டவிழ்க்கின்றது.

மேற்படி சமூக நிதியங்களின் பாதுகாவலனாக இருக்க வேண்டிய அரசே, அத்தகைய நிதியங்களில் பணத்தைச் சேமித்த உறுப்பினர்களான பொதுமக்கள் மீது தன்னுடைய கடன் கடப்பாடுகளின் பாதிப்பைச் சுமத்தி விட்டுத் தான் தப்ப முயல்கின்றது.

மேற்படி சமூக நிதியங்களின் பாதுகாவலர்களாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அரச உயர் அதிகாரிகளும் அரச கட்டமைப்புகளுமே அத்தகைய நிதியத்தையும் அதன் அங்கத்தவர்களையும் பின்னடைவில் ஆழ்த்தும் விதத்தில் நாட்டின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்தையும் வகுத்து அங்கீகரிக்கின்றார்கள் என்பதுதான் இதில் உள்ள விசித்திரம்.

நாட்டின் பொருளாதாரத் திட்டங்களையும் கொள்கைகளையும் வகுக்கும் உயரதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரித்து என்பது உண்மையே. ஆனாலும் அந்த அதிகாரத்தின் பெயரால் அப்பாவிகளின் சேமிப்பை கண்மூடித்தனமாக சூறையாடும் கொள்கைத் தீர்மானத்தை அதே நாடாளுமன்றம் எடுப்பதை நீதியின் பெயரால் தடுப்பதற்கும் இயற்கை நீதியின் கீழ் நீதிமன்றங்களுக்கு நியாயாதிக்கம் உண்டு என்பதையும் மறந்து விடக்கூடாது.

## ஹட்டனில் தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீட்டுப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலிஸார், அங்கு தேடுதலில் ஈடுப்பட்ட போது பூந்தோட்டத்தில் வளர்க்கப்பட்ட இரண்டரை அடி உயரமான ஒரு கஞ்சா செடியைக் கண்டுப்பிடித்துள்ளனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சந்தேகநபரை ஹட்டன் நீதவானிடம் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 13க்கான யோசனையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. பெரும்பாலும் இன்று ஜனாதிபதி சட்டத்தரணியும் தமது கட்சியின் சக எம்.பியுமான சுமந்திரனுடன் விரிவாக ஆலோசனை நடத்துவார் எனத் தெரிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபயவின் காலத்தில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவுக்கு அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான பொது ஆவணம் ஒன்றை இலங்கை தமிழரசு கட்சி, ரெலோ, புளொட் ஆகியன ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அப்போது கையளித்திருந்தன.

இதே ஆவணத்தின் அடிப்படையில் ஓர் ஆவணத்தை இப்போது தயாரித்து – ரெலோ, புளொட் ஆகியவை இணங்குமானால் அவற்றையும் சேர்த்துக் கொண்டு ஓர் ஆவணமாக இம்முறையும் சமர்ப்பிப்பதற்கான எத்தனத்தில் சம்பந்தன் – சுமந்திரன் இணை ஈடுபடும் எனத் தெரிய வருகின்றது.

## ஜனநாயகத் தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃவ்., தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய ஐந்தையும் உள்ளடக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்று குழு உறுப்பினர்கள் நேற்று மாலை "சூம்" முறையில் – இணைய வழியில் – கலந்துரையாடினர். மேற்படி 13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் தொடர்பான தங்களது யோசனைகளை ஆவண வடிவில் தயாரிப்பது குறித்து அவர்கள் ஆராய்ந்தனர்.

1988 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தை அப்படியே அந்த மூல வடிவத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் காலத்திற்குக் காலம் 13 ஆம் திருத்தத்திலிருந்து விலக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு அம்சங்களையும் மீண்டும் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் –

வற்புறுத்தும் இரண்டு பந்திகள் மட்டுமே அடங்கிய ஆவணத்தைத் தங்கள் யோசனைத் திட்டமாகத் தயாரிப்பது என்று நேற்றுக் கூடிய கூட்டத்தில் ஐந்து கட்சிகள் சார்பிலும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தகைய ஆவணத்தை தமிழரசு கட்சியுடனும் ஒன்று சேர்ந்து ஒரே ஆவணமாகக் கையளிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவது என்றும் –

இது தொடர்பில் இன்று அல்லது நாளை நாடாளுமன்றக் கூட்டத்துக்கு இடையே ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி சுமந்திரனுடன் உரையாடி முடிவு செய்ய வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் மேற்படி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் தீர்மானித்தனர் என அறிய வந்தது

காலை முரசு | உள்நாடு


# ஆறு காற்றாலைகள் நேற்று முதல் மன்னாரில் இயங்கத் தொடங்கின

இலங்கையின் மன்னாரில் மற்றொரு காற்றாலை மின் திட்டம் நேற்று முதல் இயங்கத் தொடங்கியது.

15 மெகாவாட் காற்றாலை மின்சாரம் தேசிய மின் விநியோகக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டது என வலு, சக்தி அமைச்சர் காஞ்சனா விஜேய சேகரா தெரிவித்தார்.

15 மெகாவாட் திறன் கொண்ட, ஹிருராஸ் காற்றாலை மின் திட்டமே நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது இரண்டு கட்டங்களைக் கொண்டுள்ளது: 10 மெகாவாட் மற்றும் 5 மெகாவாட். முதல் கட்ட 10 மெகாவாட், ஜுன் 12, 2023 அன்று வெற்றிகரமாக இயக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 5 மெகாவாட்டின் இரண்டாம் கட்டம் ஜுலை 21, 2023 அன்று இயக்கப்பட்டது. அவை இப்போது தேசிய மின்விநியோகக் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.






ஆறு காற்றாலை விசையாளிகளுடன் கூடிய இந்தக் காற்றாலை மின் நிலையம் உள்ளூர் பொறியாளர்களைக் கொண்டு கட்டப்பட்டது. திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்னதாகவே இது இயங்கத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ் நகரத்தில் நேற்று 'ஈ-குருவி நடை 2023'






உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்க்கை ஊடாக மதிப்பு கூட்டும் வகையிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் உருவாக்கும் வகையில் "ஈ-குருவி நடை 2023" நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றது.

யாழ்ப்பாண பொதுநூலக முன்றிலில் ஆரம்பித்த இந்த நடைப் பயணமானது, வைத்தியசாலை வீதியூடாக சத்திரச் சந்தியை அடைந்து, அங்கிருந்து கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொது நூலகத்தை வந்தடைந்தது.

உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்த ஒவ்வொரு நாளும் பத்தாயிரம் காலடிகள் நடப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் மதிப்பு கூட்டுவதற்கான ஆதரவை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது இந்த நடைப் பயணம்.

ஈ-குருவி நடையானது கடந்த 2020ஆம் ஆண்டு முதல் கனடா மற்றும் இலங்கையில் சமூகம் சார்ந்த விழிப்புணர்வை மேற்கொள்ளும் நடையின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளில் கை வைத்தமையால் கோட்டாவின் கதியே ரணிலுக்கும்!

## உடவளவை உடன்பிறப்புகளுக்காக கிளிநொச்சியிலிருந்து எதிர்ப்புக் குரல்

பதினொரு நாள்களாக உடவளவை விவசாயிகளின் தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியாத அமைச்சர்கள் உடனடியாக இராஜினாமாச் செய்து பிரச்சுனையைத் தீர்க்கக்கூடியவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என இரணைமடு விவசாய சம்மேளன செயலாளர் முத்து சிவமோகன் நேற்று கிளிநொச்சி ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

"69 லட்சம் வாக்குகளைப் பெற்ற கோட்டாபய அரசாங்கம் விவசாயத்தின் மீது கையை வைத்து, தரமற்ற பசளைகளை இறக்குமதி செய்து,புதிய நோய் நிலைமையை ஏற்படுத்தி, விவசாய அமைச்சின் ஏழு செயலாளர்களை மாற்றி, சர்வாதிகாரப் போக்கில் சென்றமையால் வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போதைய ரணில் அரசாங்கமும் ஏமாற்றுத் தனமாகச் செயற்படுகிறது. உடவளவை விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க முடியாத நிலையில் ங்கு 30 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் மின்சார அமைச்சர் ஒன்றை சொல்கின்றார். விவசாய அமைச்சர் ஒன்றை சொல்கின்றார்.

விவசாயிகளின் மடியில் கைவைத்த கோட்டாபய அரசுக்கு ஏற்பட்ட நிலையே ரணிலுக்கும் ஏற்படப் போகின்றது. – எனத் தெரிவித்தார்.

## மல்லாவி ஏரியில் பெரும் எண்ணிக்கையில்

# செத்து மடிந்து மிதந்த மீன்களை விற்கத் தடை!

கடும் வெயிலால் முல்லைத்தீவு மல்லாவி ஏரியில் லட்சக்கணக்கான மீன்கள் செத்து மடிந்து மிதக்கின்றன.அந்த மீன்களை பலர் சேகரித்து விற்பனை செய்யத் தொடங்கியுள்ளனர்.

இப்படி செத்து மிதக்கும் மீன்களை மல்லாவி மக்கள் சேகரித்து மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளனர் எனவும், எனவே இத்தகைய மீன்களை விற்பனை செய்ய பொலிஸார் அனுமதிக்கக் கூடாது எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, மல்லாவி குளத்தில் மீன் விற்பனை செய்பவர்களைக் கைது செய்யப் பொலிஸார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு சுகாதார அதிகாரிகள் மல்லாவி ஏரிக்குச் சென்று மீன்கள் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். முதற்கட்டமாக அதிக சூரிய ஒளியினால் மீன்கள் இவ்வாறு உயிரிழந்திருக்கலாம் என சுகாதார அதிகாரிகள் ஊகிக்கின்றனர்.

இறந்த மீன்களின் மாதிரிகளை எடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் பிரிவுக்கு அனுப்பி வைக்கும் வரை மல்லாவி ஏரியின் மீன்களைச் சாப்பிடுவதைத் தவிர்க்குமாறு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் முல்லைத்தீவு விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகள், ஏரிகளின் நீர் மட்டம் தொடர்பில் மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர்கள் அக்கறை காட்டாது லட்சக்கணக்கான மீன் குஞ்சுகளை ஒரே சமயத்தில் ஏரிகளில் விடுவதால் இப்படி மீன்கள் பெருமளவில் செத்து மடிவதாக தெரிவிக்கின்றனர்.

# உள்ளூராட்சி மன்றங்களில் அறவீடு இணைய மயமாகும்



இந்த வருட இறுதிக்குள் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இணையத்தளத்தில் பணம் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஏற்கனவே 69 உள்ளூராட்சி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்போது ஒன்லைன் முறையின் ஊடாக வரிகளைச் செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நிர்மாணத்துறைக்கு தேவையான அனுமதிகளை ஒன்லைன் முறையின் கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

மக்கள் எவ்வித அசௌகரியமும் இன்றி தமது கடமைகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்தப் புதிய வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்வருட இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் உள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# கிண்ணியா விவசாயிகளுக்கு சிறுபோகத்தில் பெரு நஷ்டம்

திருகோணமலை,கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கரைச்சல் திடல் விவசாய பகுதியில் நெல் அறுவடை தற்போது இடம் பெற்று வருகின்றது.இருந்த போதிலும் இம்முறை சிறுபோகச் செய்கை அறுவடையில் பாரிய நஷ்டங்களை தாம் எதிர்நோக்கியுள்ளனர் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் சுமார் 350 க்கும் மேற்பட்ட நிலங்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை இடம் பெற்று வருகின்றது. நெல் கொள்வனவில் நிர்ணய விலை இன்மை ,வெட்டுக் கூலி அதிகம், விளைச்சல் குறைவு எனப் பல பிரச்சினைகளைத் தாங்கள் எதிர்நோக்கியுள்ளனர் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தனியார் உரிமையாளர்களே நெல்லை கொள்வனவு செய்கின்றனர். நிர்ணய விலை இன்மையால் பாரிய நஷ்டம். இலாபமற்ற அறுவடை எஞ்சியுள்ளதாகவும், அரசாங்கம் இதற்கு சாதகமான பிரதிபலிப்பைக் காட்டி நிர்ணய விலையை அறிவிக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். .

ஒரு ஏக்கருக்கு 15 தொடக்கம் 20 மூடை வரையே விளைச்சல் கிடைத்துள்ளது. எல்லாக் கூலிகளும் போக எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை. நெல்லின் விலை ஒரு மூடை சாதாரணமாக ஐயாயிரம் ரூபா வரையே செல்கிறது.இதற்கு அரசாங்கம் சரியான பதிலைத் தர வேண்டும். விவசாயத்தை நம்பியே நாங்கள் வாழ்கின்றோம் – எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



எனவே நெல்லுக்கான உயர்ந்த பட்ச நிர்ணய விலையைத் பெற்றுத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பாடசாலைகளில் இனிமேல் வருடத்துக்கு ஒரு பரீட்சை!

## பாட நூல்களும் தவணை அடிப்படையில் பிரிப்பு

ஒரு பாடசாலை தவணைக்கு ஒரு செயல் நூல் என்ற வகையில் எதிர்காலத்தில் மூன்று தவணைகளுக்கான பாட சாலை செயல் நூல்கள் மூன்று பகுதிகளாக மாணவர்களுக்கு வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மாணவர்களின் புத்தகப் பையின் அதிக எடை குறைவதுடன், மாணவர்களின் முதுகெலும்பை நேராக வைத்து உடல் ஆரோக்கியம் காக்கப்படும் என எதிர்பார்க்கப்படுதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையை மாற்றும் வகையில் 2024ஆம் ஆண்டின் முதலாம் ஆண்டு தொடக்கம் தவணைப் பரீட்சைகள் குறைக்கப்பட்டு வருடத்திற்கு ஒரு பரீட்சை மாத்திரமே நடத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு செய்ய முடிந்தால், ஒவ்வொரு பாடம் அல்லது தொகுதியின் முடிவிலும் மதிப்பீடு மூலம் மதிப்பெண்கள் கணினி குறிப்புகளாக பதிவு செய்யப்பட்டு, ஆண்டின் இறுதியில் பரீட்சை மதிப்பெண்களுடன் சேர்க்கப்படும், என்பதோடு, ஆரம்பத்தில் இது பரீட்சை மதிப்பெண் 70 வீதம் மற்றும் தொகுதி மதிப்பெண்ணில் 30 வீதமாகவும் கருதப்பட்டாலும், படிப்படியாக அதனை 50 வீதம் வரை மதிப்பெண்கள் வரம்பில் கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இம்முறையை நடைமுறைப்படுத்தும் போது பாடசாலைக்கு சமுகமளித்தல், தங்கியிருத்தல், தினசரி வகுப்பில் செயற்படுவதும் கட்டாயமாக்கப்படுவதால், பாடசாலை மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் பெற்றோர்கள் தேவையற்ற போட்டியில் சிக்கிக் கொள்ளாமல், மேலதிக வகுப்புகளுக்கு ஆயிரக்கணக்கில் பணம் செலவழிக்காமல், அந்தப்பணத்தை குழந்தைகளின் உணவுத் தேவைக்கு செலவிட முடியும் என்றும், இலவச கல்வியின் அடிப்படை நோக்கங்கள் நிறைவேறும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஜயவர்தனபுர கல்வி வலயத்திற்குட்பட்ட ஹோவாகம மாதிரி ஆரம்ப பாடசாலையின் மாணவர் தலைவர்களுக்கான உத்தியோகபூர்வ சின்னங்கள் அணிவிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே கல்வி அமைச்சர் இவற்றைத் தெரிவித்தார்.

# தொலைபேசிக் கம்பிகளை அறுத்துத் திருடியோர் கைது

சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசிக் கம்பிகளை அறுத்துத் திருடியவர்கள் என்று கூறப்படும் இரு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிஉல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதுகல சந்தியிலிருந்து பிஹல்பொல நோக்கி செல்லும் பிரதான வீதியில் உள்ள தொலைபேசி கம்பிகளை சந்தேகநபர்கள் அறுத்துத் திருடியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35 மற்றும் 59 வயதுடைய நாரம்மல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நேற்று குளியாப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவிருந்தனர். கிரிஉல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கிழக்கு ரயில் சேவை காட்டுத் தீயால் பாதிப்பு

காட்டுத் தீ பரவல் காரணமாக கிழக்கு ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹபரணைக்கும் கல்ஓயாவுக்கும் இடையில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதனால் தண்டவாளங்களின் சிலிப்பர் கட்டைகளில் தீ பிடித்துள்ளதாகவும், தீ பிடித்த தண்டவாளப் பகுதிகள் அகற்றப்பட்டு புதிய தண்டவாளங்கள் இணைக்கப்படுகின்றன எனவும் ரயில்வேத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இந்த தீ பரவல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நெடுஞ்சாலைகள் மற்றும் தொழில்துறை அதிகாரிகளுக்கு ரயில்வே திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, காட்டுத் தீ தொடர்பான செய்திகள் தற்போது அதிகரித்து வருவதாக வனப் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வித வட்டி வீதங்கள்; மத்திய வங்கியின் முடிவால் வர்த்தக வங்கிகள் இக்கட்டில்




இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வட்டி வீதங்கள் ஒரே நேரத்தில் செயற்படுத்தப்படுவதால் வங்கி வைப்புக்கள் தொடர்பில் perimeters குழப்பம் ஏற்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத வர்த்தக வங்கியின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, இலங்கை மத்திய வங்கியால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள கொள்கை வட்டி விகிதங்கள் வங்கி வைப்புகளுக்கு 11 சதவீதம் மற்றும் கடன்களுக்கு 12 சதவீதமாகும்.

இந்த வட்டி விகிதங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வர்த்தக வங்கிகளை மத்திய வங்கி கட்டாயப்படுத்தியுள்ளது.

இருந்த போதிலும்,நாட்டின் பாதுகாப்பான வைப்புத் தொகையாகக் கருதப்படும் திறைசேரி உண்டியல்கள் மீது 20 சதவீத வட்டியை மத்திய வங்கி செலுத்துகிறது.

இதன் காரணமாக வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வட்டி விகிதத்தில் வைப்புத்தொகையைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக வங்கி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

வங்கி வட்டி தொடர்பில் மத்திய வங்கி இரண்டு கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதால் இந்த குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் 19 சதவீத வட்டி விகிதத்தில் கூட திறைசேரி உண்டியல்களை தேவையான தொகைக்கு விற்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் நாட்டின் வங்கி வட்டி விகிதங்கள் கண்டிப்பாக அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், சில தனியார் நிதி நிறுவனங்கள் தங்கள் வருடாந்திர வட்டி விகிதங்கள் 22 சதவீதம் முதல் 24 சதவீதம் வரை இருக்கும் என்று ஏற்கனவே அறிவித்துள்ளன.

# விபத்தில் காயமுற்ற யாழ்ப்பாண பல்கலை மாணவன் மரணம்

யாழ்ப்பாணம் – ஆனைப்பந்தி பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நுவரெலியாவைச் சேர்ந்த கருப்பையா பிரதீசன் (வயது 22) எனும் மாணவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஆனைப்பந்தி சந்தியில் மாணவன் பயணித்த மோட்டார் சைக்கிளும், பிறிதொரு வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மோசடி

# விசாரணைக்கு நடுவில் நழுவும் 4 அதிகாரிகள்!









இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் பிரிவில் பணியாற்றிய நான்கு சிரேஷ்ட அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை தமது இராஜினாமாக் கடிதங்களை கையளித்துள்ளனர் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நான்கு அதிகாரிகளும் தனியார் துறையில் பணிக்குச் செல்வதற்காக பதவி விலகுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் பாரிய எரிபொருள் மோசடி தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வரும் வேளையில் அதிகாரிகள் பதவி விலகுவதால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இலங்கையில் எரிபொருள் வியாபாரத்தை ஆரம்பித்துள்ள வெளிநாட்டு நிறுவனமொன்றில் இணைவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயாராகி வருகின்றனர் எனவும், அந்த நால்வரில் சிலர் அதிக சந்தையைக் கொண்ட "சிபொட்கோ" நிறுவனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலையங்களைத் தெரிவு செய்த அதிகாரிகள் எனவும் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டின் போது கமிஷன் பணம் பெற்று தொழிற்சாலைகள் மற்றும் ஹோட்டல்களுக்கு பவுஸராக எரிபொருளை வழங்க ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரி ஒருவரும் பதவி விலகல் கடிதம் வழங்கிய நான்கு அதிகாரிகளில் அடங்குகிறார் எனவும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அதிகாரிகள் பதவி விலகுவதற்கு முன்னர் அவர்களது சொத்துக்கள் தொடர்பில் கூட்டுத்தாபன மட்டத்திலும் ஏனைய சட்ட அமைப்புகளின் ஊடாகவும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சாகாமம் பிரதான வீதியில் போக்குவரத்து முடங்கியது

(வடிவேல் டினேஸ்)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று மாலை ஏற்பட்ட திடீர் கால நிலை மாற்றத்தினால் பல இடங்களில் அதிகரித்த காற்றுடன் கூடிய மழை பதிவாகியிருந்தது.

இதன் காரணமாக அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பகுதியில், சாகாமம் பிரதான வீதியில், புளியம்பத்தை பிள்ளையார் ஆலயத்தின் அருகில் காணப்பட்ட பாரிய மரம் ஒன்று வீதியின் குறுக்காக வீழ்ந்தால் இரவு வேளை போக்குவரத்து பாதிப்படைந்து.

தற்போது வேளாண்மை அறுவடை இடம் பெற்று வருவதால் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மாற்று வழியைப் பயன்படுத்த அறிவுறுத்தப்படுள்ளது.

கண்ணகிபுரம், அளிக்கம்பு , கவடாப்பிட்டி, தேவகி கிராமம், மாந்தோட்டம், பொத்துவில் போன்ற பகுதிகளுக்கன பிரதான பாதையாக இது காணப்படுகின்றது.

இதனால் கண்ணகிபுரம் வயல்வெளி ஒற்றையடி பாதையை மக்கள் தற்போது பயன்படுத்துகின்றனர்.

இது தொடர்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தெட்சணமூர்த்தி நவனீதராஜ் குறிப்பிடுகையில் –

இந்தச் சம்பவம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிரதேச சபை செயலாளர்களுக்கு அறிவித்துள்ளோம். திங்கள் காலை மரத்தை அகற்றும் பணி மேற்கொள்ளப்படும் என்றார்.



### இலங்கை வருகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவுள்ளார்.

கொழும்பில் உள்ள சினமன் லேக் சைடில் நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே அவர் வருகை தரவுள்ளார் எனக் கூறப்படுகிறது.எத நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புகளைச் சந்தித்துள்ள இலங்கையில், குழந்தைகளின் நிலைமை குறித்து அவர் இதன்போது கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் யுனிசெவ் நிறுவனத்தின், பிராந்திய நல்லெண்ணத் தூதராக சச்சின் தனது பங்களிப்பை தெற்காசிய பிராந்தியம் முழுவதும் வழங்கி வருகிறார்.

### வேலன் சுவாமிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழைப்பாணை அனுப்பபட்டுள்ளது.

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முன்னிலையாகுமாறு தெரிவித்தே கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் ஒப்பமிடப்பட்டு, இந்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

"சட்டமுறையற்ற போராட்டம் நடைபெற்றமை சம்பந்தமாக" எனத் தெரிவித்தே இந்த அழைப்பாணை அனுப்பபட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கும் இன்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் பிரிமியர் லீக் இறுதிப் போட்டியில் இளவாலை யங் ஹென்றீஸ் சாம்பியன்!

## பெனால்டி உதை மூலம் வெற்றி தீர்மானம்




**A one media** வின் ஒருங்கிணைப்பில், வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் சக்தி டிவியுடன் இணைந்து நடத்திய **JAFFNA FOOTBALL PREMIER LEAGUE** இன் இறுதி போட்டி நேற்று மாலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இந்த போட்டியில் விளையாடிய இளவாலை யங் ஹென்றீஸ் அணி, குருநகர் பாடும் மீன் அணியை 4-3 என்ற பெனால்ட்டி கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

ஆட்டம் முழுவதும் விறுவிறுப்பாக நடைபெற்றிருந்தாலும் இரண்டு அணியினருமே கோல் போடத் தவறி இருந்தார் கள். இதனைத் தொடர்ந்து ஆட்டம் பெனால்டி மூலமான தீர்வுக்குச் சென்றது. முதல் பெனால்ட்டியை இளவாலை யங் ஹென்றீஸ் அணி அடிக்க தவறி இருந்தாலும் பின்னர் சிறப்பாகச் செயல்பட்டு பெனால்டி சுற்றில் 4-3 என்ற கணக்கில் வெற்றி பெற்றார்கள்.

இப் போட்டியைத் தொடர்ந்து நடந்த பரிசளிப்பு விழாவில் சிறந்த வளர்முக வீரருக்கான விருது சென்ட் நிக்கலஸ் அணி வீரர் ஜெரோம் அவர்களுக்குச் சென்றது. அதே வேளையில் சிறந்த கோல் காப்பாளர் விருதை இளவாலை யங் ஹென்றீஸ் அணியின் அமல்ராஜ் பெற்றுக்கொண்டார். அதேபோன்று கோல்டன் பூட் விருது இளவாலை யங் ஹென்றீஸ் அணியில் ஜுட் சுபன் வசமானது.













# ராகுல் காந்தி இன்று மீண்டும் நாடாளுமன்றம் திரும்புகிறார்?

## - சபாநாயகர் முக்கிய தீர்மானம்



ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறைத் தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்திவைத்ததை அடுத்து, அவரை மீண்டும் எம்.பி-யாக அங்கீகரிக்கும் விடயத்தில் சபாநாயகர் ஓம் பிர்லா இன்று தனது முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் கடந்த 2019 மக்களவை தேர்தல் பிரச்சாரத்தின்போது, எல்லா திருடர்களுக்கும் மோடி என பெயர் வந்தது எப்படி என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதன்மூலம் மோடி சமூகத்தினரை ராகுல் அவமதித்துவிட்டார் என தெரிவித்து குஜராத் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் பர்னேஷ் மோடி, சூரத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இதில் ராகுலுக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதனால், கேரள மாநிலம் வயநாடு தொகுதி எம்.பி. பதவியில் இருந்து ராகுல் தகுதி இழப்பு செய்யப்பட்டார். இதை எதிர்த்து செஷன்ஸ் நீதிமன்றம், குஜராத் உயர் நீதிமன்றத்தில் ராகுல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் ராகுல் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.எஸ்.நரசிம்மா, சஞ்சய் குமார் அமர்வு, இந்த வழக்கில் விசாரணை நீதிமன்ற நீதிபதி அதிகபட்சமாக 2 ஆண்டு சிறை தண்டனை விதித்துவிட்டார். ஒரு நாள் குறைவாக விதித்திருந்தாலும், எம்.பி. பதவியில் இருந்து தகுதி இழப்பு ஆகியிருக்க முடியாது. இந்த தகுதி இழப்பால் ஏற்பட்ட விளைவுகள் தனிநபர் உரிமையை மட்டுமின்றி, அவரதுதொகுதி மக்களையும் பாதித்துள்ளது. எனவே, 2 ஆண்டுகள் சிறை தண்டனைக்கு தடை விதிக்கப்படுகிறது என அறிவித்தனர்.

ராகுல் காந்தியின் 2 ஆண்டு சிறைத்தண்டனைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்ததை அடுத்து, அவரை மீண்டும் எம்.பியாக அங்கீகரிக்க வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் இன்னும் தனது முடிவை அறிவிக்கவில்லை. இன்று நாடாளுமன்றம் கூட உள்ள நிலையில், சபாநாயகரின் முடிவு மீது காங்கிரஸ் கட்சியின் கவனம் குவிந்துள்ளது.

இந்த நிலையில், சபாநாயகர் தனது முடிவை நாளை அறிவிப்பார் என தகவல் வெளியாகி உள்ளது. ஒருவேளை அவர் தனது முடிவை இன்று அறிவிக்காவிட்டால், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் பிரச்சினையை எழுப்ப திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## மணிப்பூருக்கு குடியரசுத் தலைவர் ஆட்சி கோரிய மக்கள் நீதி மய்யம்!



மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்தக் கோரி மக்கள் நீதி மய்யம் சார்பில் மதுரையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மணிப்பூர் வன்முறைக்கு எதிராக இந்தியா முழுவதும் அரசியல் கட்சியினர், கல்லூரி மாணவர்கள் என பலரும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், மதுரை பெத்தானியபுரம் பகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அந்தக் கட்சியின் இளைஞரணி செயலர் கவிஞர் சிநேகன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், மணிப்பூரில் பா.ஜ.க. அரசை கலைத்து விட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று கோஷமிடப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் காளி வேடம் அணிந்து கட்சியைச் சேர்ந்த ஒருவர் பங்கேற்றார். இதன்போது, மத்திய அரசு மற்றும் மணிப்பூர் மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

## தினகரனுக்கு மீண்டும் பதவி!



அ.ம.மு.க. பொதுச்செயலாளராக டி.டி.வி. தினகரன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தின்போது கட்சியின் புதிய நிர்வாகிகளுக்கான தேர்தல் நடைபெற்றது.

இதுகுறித்து கட்சியின் தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள குறிப்பில், கழக பொதுச்செயலாளராக டிடிவி தினகரன், கழக தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.கோபால், கழக துணைத்தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.அன்பழகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொடருந்து விபத்தில் 25 பேர் உயிரிழப்பு!




பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் தொடருந்து தடம்புரண்டதில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த, விபத்தில் 80 பேர் வரை காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கராய்ச்சியில் இருந்து அபோதாபாத் நோக்கிச்சென்ற தொடருந்தே தடம் புரண்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்து ஏற்பட்ட பகுதியில் தொடர்ந்தும் மீட்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

விபத்தில் காயமடைந்த நபர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், நவப்சா பகுதியில் காணப்படும் வைத்தியசாலை களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேருந்து விபத்தில் 24 பேர் உயிரிழப்பு!



மொரோக்கோவின் மத்திய மாகாணமான அசிலாலில் நேற்று இடம்பெற்ற பேருந்து விபத்தில், 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

வாராந்த சந்தைக்கு பயணிகளை ஏற்றிச்சென்ற சிறிய ரக பேருந்து ஒன்று வளைவுப்பகுதியொன்றில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த விபத்து தொடர்பில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மொரோக்கோவின் குறித்தப் பகுதியில் தொடர்ந்தும் அதிக விபத்துக்கள் பதிவாகி வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

## 10 பெண்களை திருமணம் செய்த இளைஞர்!



அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்தவர் 28 வயதான லஸ்டின் இமானுவேல் 10 இளம் பெண்களை திருமணம் செய்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

இந்த திருமண விழாவை ஸ்டின் கடற்கரையில் கொண்டாடினார்கள் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பான காணொளியை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ள இமானுவேல், இன்று நான் பத்து பெண்களை மணந்தேன். அனைவரும் என் மனைவிகள் என குறிப்பிட்டுள்ளார்.

லஸ்டின் சமூக வலைதளங்களில் மிகவும் பிரபலமானவர்.

இவருக்கு டிக்டொக்கில் அதிக பின்தொடர்பவர்கள் உள்ளனர்.

அவர் வெளியிட்டுள்ள திருமண காணொளிக்கு 5 லட்சத்துக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர்.

## கருங்கடல் மீது வட்டமிட்ட அமெரிக்க ட்ரோன்!

கருங்கடல் மீது அமெரிக்க டிரோனை தங்கள் விமானம் இடைமறித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் அறிக்கையொன்றினை வெளியிட்ட இதனை தெரிவித்துள்ளது.

கருங்கடல் மீது அமெரிக்க டிரோனை சுட்டு வீழ்த்துவதற்காகவும் ரஷ்ய விமானப்படை தனது எஸ்.யு 30 போர் ஜெட் விமானத்தை தயார் நிலையில் வைத்துள்ளது.

இதையடுத்து எல்லையருகே வட்டமிட்ட அமெரிக்க டிரோன் திரும்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் விவசாயத்தை நோக்கிச் சென்றால்

# உணவில் நாம் தன்னிறைவு அடையலாம்

## பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



கொழும்பு, ஓக.06

இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். நாம் அனைவரும் கைகோர்த்து, நமது நம்பிக்கைக்குரிய கூட்டாளிகளைப் போல உள்நாட்டில் விவசாயத்தை நோக்கிச் சென்றால், உணவில் நாம் தன்னிறைவு அடையலாம்.

இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வைத்து உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் அங்கு உரையாற்றும் பொது மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையின் நிதி நெருக்கடியால் இலங்கை பாரிய சர்வதேச பிரச்சினையை எதிர்கொண்டது. நெருக்கடியில் இருந்து மீள சர்வதேச ஆதரவும் நட்பும் தேவை. இது போன்ற நெருக்கடிகளைச் சந்தித்த நாடுகள் அவ்வளவு சீக்கிரம் தலை தூக்கவில்லை.

நான் சந்திக்கும் ஒவ்வொரு வெளிநாட்டு தலைவர்களும் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்று கூறுகிறார்கள். நம் நாட்டு விவசாயிகளை நினைத்து பெருமை கொள்கிறோம்.

உலகமே உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்ட போது, நமது விவசாயிகள் பிரச்சினைகளை பொருட்படுத்தாமல் விவசாய நிலங்களுக்குச் சென்று நல்ல விளைச்சலைக் கொடுத்தனர். விவசாய நிலத்தின் குறைபாடுகளைக் களைந்து அதிக விளைச்சல் தருவது அவசியம்.

நிதி நெருக்கடியின் மத்தியில் இருந்த நிலைமைகளில் இருந்து இன்று இலங்கை சர்வதேசத்தின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ளது. பொருளாதாரத்தை மாற்றி எழுத முடிந்தது என்ற நம்பிக்கையில் தான் இருந்தது.

சர்வதேச அளவில் வங்கி பரிவர்த்தனைகள் நின்றுவிட்டதை மறந்துவிடாதீர்கள். இப்படி ஒரு சர்வதேசப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருப்பதை அனைவரும் புரிந்து கொள்வது கடினமாக இருந்தாலும், ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாவட்ட அரச அதிபர்கள், மாகாண சபை அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் உட்பட அனைத்து பொது சேவையாளர்களும் இதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

வெல்லஸ்ஸ பூமி எமது நாட்டின் சுதந்திரத்தின் எதிரொலியாகும். கடந்த காலத்தை நினைவு கூரும் இந்த மண்ணுக்கு நம் நாட்டின் அரசும் கடன்பட்டிருக்கிறது. நாம் உணவில் தன்னிறைவு அடைந்தால், உணவு கொண்டு வர டொலர்களைப் பயன்படுத்துவதை நிறுத்த முடியும்.

இப்பகுதிகளில் விவசாயம் செய்பவர்களுக்கு நிலம் ஒதுக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டும். இந்த நாட்டின் மிகக் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை நிறுத்த முடியாது. மோதலைத் தொடங்க இதுவே சிறந்த நேரம் என்று சிலர் நினைக்கலாம். மோதலை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை. மனிதாபிமானத்துடன் சிந்திக்க வேண்டும். நமது நாட்டின் மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இந்த நிவாரணத்தை விரைவாக வழங்கவும், தொகையை அதிகரிக்கவும் இது ஒரு முயற்சியாக செய்யப்படுகிறது.

தற்போதுள்ள பிரச்சினைகளை தீர்த்து இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கான பொறுப்பை அரச அதிகாரிகள் என்ற வகையில் நிறைவேற்றுங்கள். ஏராளமான அரச ஊழியர்களை விடுவிக்கவும், நீக்கவும் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. நாங்கள் அதை செய்யவில்லை.– என்று குறிப்பிட்டுள்ளார்.





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது. கொடியேற்ற நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், உற்சவகால பிரதம குரு சிவஸ்ரீ திருக்குமரக் குருக்கள் தலைமையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் ஏற்பாட்டில் திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

திருவிழா 18 நாட்கள் நடைபெற்று எதிர்வரும் 16 ஆம் திகதி ஆடிஅமாவாசை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையும் என்று ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

( வி.ரி. சகாதேவராஜா)

# கல்முனை வலய பாடசாலைகளுக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள்

## ஆசிய மன்றத்தால் வழங்கி வைப்பு



(நூருல் ஹுதா உமர் )

இலங்கை ஆசிய மன்ற அனுசரணையில் நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, கல்முனை தமிழ், சம்மாந்துறை கோட்டங்களை சேர்ந்த பாடசாலைகளுக்கு சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை நூலகங்கள் மற்றும் மாணவர்களுக்கான கடந்த கால வினாப் பத்திர தொகுப்பு நூல்கள் என்பனவே இவ்வாறு வழங்கப்பட்டன.

இன்று (06) மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் வைத்து இவை வழங்கி வைக்கப்பட்டன.

ஆசிய மன்ற முன்னாள் நிகழ்ச்சித் திட்ட ஆலோசகரும், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனம் மற்றும் சி.ஜி.ஐ. நிறுவனம் ஆகியவற்றின் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம். வலீத், இலங்கை ஆசிய மன்றத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய 16 பாடசாலைகளுக்கு இந்த நூல்கள் வழங்கப்பட்டன.

ஆசிய மன்ற புத்தகங்கள் நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் அன்டன் டீ நல்லதம்பியின் பிரசன்னத்துடன் இவை பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். எஸ். நஜீம் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம். சரிபுதீன், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே. டேவிட், கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சரவணமுத்து , பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளின் அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், ஆசிய மன்ற அதிகாரிகள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அம்பாறை ஊடகவியலாளர் சித்தீக் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டார்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் அம்பாறை பிராந்திய செய்தியாளரும் 'டுடே சிலோன்' ஊடக வலையமைப்பின் பிரதம செய்தி ஆசிரியருமான எஸ்.எம். இஸட். சித்தீக் நேற்று இரவு 07.15 மணியளவில் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது–

குறித்த செய்தியாளருக்குச் சொந்தமான இறக்காமத்தில் காணப்படும் 'தாய்மடி' எனும் ஓய்வகத்துக்கு முன்பாக மறைந்திருந்த இனந்தெரியாதவர்கள் இவரைத் தாக்கியுள்ளனர். தலைக்கவசம் அணிந்திருந்த நிலையில் தலையில் காயங்கள் எவையும் ஏற்படவில்லை.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் தெரிவிக்கையில்–

'தாய்மடி' என்னும் எனது ஓய்வகத்துக்கு அருகாமையிலும் அதனை அண்டியுள்ள இருள் நிறைந்த பகுதிகளில் இரவு வேளைகளில் மறைந்திருந்து மதுபானம் மற்றும் ஏனைய போதை வஸ்துக்களை பயன்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வருவதால் இவற்றைத் தடுக்க வேண்டும் என்பதற்காக பல முயற்சி



களில் ஈடுபட்டேன். குறித்த இடத்தில் கடந்த 20 நாள்களுக்கு முன்பாக சிலர் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த போது அவர்களுக்கு முன் எச்சரிக்கையாக இவற்றை நிறுத்தாவிட்டால் பொலிசாரிடம் முறைப்பாடு செய்வேன் என கூறியிருந்தேன்.

அதன் பின்னர் இரண்டு நாள்களுக்குப் பின்னர் ஓய்வகத்தின் வளாகத்தில் காணப்பட்ட மேசைகள் உடைக்கப்பட்டு விடுதியின் கூரைகளும் உடைக்கப்பட்டிருந்தன. வானொலியும் களவாடப்பட்டு இருந்தது.

இதன் தொடராக நேற்று இரவு குழுவாக வந்த மூவர் என் மீது தாக்குதல் நடத்தினர். குறித்த நபர்களை இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையாகும். இது தொடர்பில் இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.– என்றார்.

# உதவியோரை கௌரவிக்கும் நிகழ்வு

(றிபாஸ்)

பாலமுனை மரண உபகரண நிதியத்தின் ஏற்பாட்டில் அமைப்புக்கு பல வழிகளிலும் உதவி வழங்கியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

'உன் பாதம் சொர்க்கத்தின்பக்கம்' எனும் தொனிப்பொருளில் அமைப்பின் தவிசாளர் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எம். றிபாஸ்டீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வில் வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபரும், தற்போதய இறப்பர் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளருமான ஐ.எம்.ஹனிபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றிய காலப் பகுதியில் நிதியத்துக்கு பல ஆலோசனைகளையும், நிறுவன வளர்ச்சிக்கு உதவிகள் பல செய்தமைக்காகவும் பிரதம அதிதிக்கு அமைப்பின் பிரமுகர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

பாலமுனை மரண உபகரண நிதியத்தின் ஜனாஸா இலவச வாகன சேவையின் 12 வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் அமைப்பின் அமைப்பாளரும், ஆய்வு சபையின் சேவைத் திட்ட பணிப்பாளருமான ஐ.எம்.ஜிப்ரி, சமூர்த்தி வங்கி முகாமையாளர் ஹமீட், மு.கா. அமைப்பாளர் ஏ.எல்.அலியார், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.08.2023

## மேஷம்

இன்று தன்னம்பிக்கையும் உற்சாகமும் குறைந்து காணப்படும். இன்றைய நாள் சாதகமாக அமைய உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

கடுமையான பணிகள் காரணமாக தவறுகள் நேரிடலாம். முறையான திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையார் உங்களிடம் வேறுபட்டுக் காணப்படுவதாக உணர்வீர்கள். நிலைமையை சீராக்க உங்கள் துணையுடன் பேசி விஷயங்களை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்றைய நிதிநிலைமையை நீங்கள் விவேகமான முறையில் கையாள முடியாது. தேவையற்ற செலவுகளுக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

தலைவலிக்கான வாய்ப்புகள் உள்ளது. தேவையற்ற மனக் கவலைகளை தவிர்த்து உடல் நலத்தை பராமரிக்க வேண்டும்.

## ரிஷபம்

இன்று குறைந்த உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். என்றாலும் இசையை கேட்பது அல்லது திரைப்படங்களை பார்த்தல் போன்ற விஷயங்களில் ஈடுபட்டு உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் வளர்ச்சிகரமான சூழல் இல்லை. அதிகப் பணி காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திட்டமிட்டு ஒழுங்கமைத்து பணி செய்வதன் மூலம் நல்ல முறையில் செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பேண வெளிப்படையாகப் பேச வேண்டியது மிகவும்அவசியம்.இது கருத்து வேறுபாட்டை நீக்கி ஒற்றுமையை உண்டாக்கும்.

இன்று வீட்டு சீரமைப்புக்கான செலவினங்கள் அதிகமாக காணப்படும். உங்கள் நெருக்கமானவர்களுக்காக நீங்கள் செலவு செய்ய நேரலாம்.

இன்று உடல் நலம் சீராக இருக்காது.

## மிதுனம்

இன்றையநாள் உங்களுக்கு சாதகமாக உள்ளது. கடினமான உழைப்பின் மூலம் இன்று நீங்கள் உங்கள் இலட்சியங்களை அடைய முடியும். அதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். குடும்ப பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து தீர்ததுக் கொள்ள முடியும்.

கடின உழைப்பின் மூலமாக சாதகமான நிதிநிலைமை காணப்படும். ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் பெற்று மகிழ்வீர்கள்.

இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள்.முழு ஆரோக்கியத்துடன் திடமாக காணப்படுவீர்கள்.

## கடகம்

இன்று சாதகமான மற்றும் நற்பலன்கள் கிடைக்கும் நாள். இலட்சியங்களை அமைத்துக் கொள்வது மற்றும் முறையான திட்டமிடல் இன்று நற்பலன்களை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

புதிய பணி வாய்ப்புகள் மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும். இருவரும் குடும்ப விசேஷத்தில் பங்கு கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

சேமிக்கும் ஆற்றல் இன்று அதிகமாக காணப்படுகின்றது. தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்றுமிகவும்சுறுசுறுப்பாகஇருப்பீர்கள்.ஆற்றல்மிகுந்து காணப்படுவதால் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

## சிம்மம்

இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் என்றாலும் சமநிலை மற்றும் உணர்ச்சிக் கட்டுப்பாடுகள் மூலம் இன்று நற்பலன்களைக் காண்பீர்கள். உங்கள் அன்றாட வேலைகளை ஒழுங்கமைத்தலும் பிரார்த்தனையும் உங்களுக்கு கைகொடுக்கும்.

பணியைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப்படியான வேலைகளால் பணியில் தாமதம் ஏற்படும்.

உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் துணையிடத்தில் ஈடுபாடு காட்ட வேண்டும். மகிழ்ச்சியான விதத்தில் ஒற்றுமையான தருணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சி தரக்கூடியதாக இல்லை. பணஇழப்புக்கு வாய்ப்புகள் உள்ளது.

உங்களிடம் பதட்டம் காணப்படும். பதட்டத்தின் காரணமாக காய்ச்சல் ஏற்படலாம்.

## கன்னி

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. வளைந்து கொடுத்துப் போகும் அணுகுமுறை மகிழ்ச்சியை உருவாக்கித் தரும். அன்றாட செயல்களில் ஏற்படும் தாமதம் கவலைகள் அளிக்கும்.

இன்று கூடுதல் பணிச் சுமைகள் காணப்படும். அதனால் குறித்த நேரத்தில் சாதாரண பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் விவாதங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. உங்கள் துணையிடம் நீங்கள் சாந்தமாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும்.

பயணத்தின் பொழுது பண இழப்புகள் ஏற்படலாம்.

பணிச்சுமையின் காரணமாக தலைவலி உபாதைக்கு ஆளாவீர்கள்.

## துலாம்

இன்றைய நாள் ஏற்றத்தாழ்வின்றிச் சமமாக இருக்கும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இன்று பயணங்களால் அலைச்சல் ஏற்படும்.

பணிகளை தாமதமின்றி குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். சிக்கலான பணிகளைக் கூட இன்று சுலபமாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க நீங்கள் போராட வேண்டியிருக்கும். இது உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை உருவாக்கும்.

இன்று அதிக அளவில் பணவரவு காணப்படும்.உபரிப் பணம் உங்களுக்கு திருப்தியைத் தரும்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் மகிழ்ச்சிதரக் கூடியதாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தவிதக் குறைபாடும் காணப்படாது.

## விருச்சிகம்

மிகுந்த திருப்தி அளிக்கக் கூடிய புதிய வாய்ப்புகள் கிடைக்கும் நாள். உங்கள் குறிக்கோள்களை அடைய செயலாற்ற வேண்டிய நாள். பிரார்த்தனை செய்வதற்கு உகந்த நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை கவனிப்பதில் உறுதியாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளிலும் வெற்றி பெறுவீர்கள்.

தகவல் பரிமாற்றக் குறைபாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு குறைந்து காணப்படும். உங்கள பிரியமானவர்களிடம் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி அபாரமாக உள்ளது. உங்கள் சேமிக்கும்ஆற்றலும் அதிகரித்து காணப்படும்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். அதனால் ஆரோக்கியமும் சிறந்து விளங்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.08.2023




குடும்ப விஷயங்கள் காரணமாக மனதில் கவலைகள் ஏற்படும். கவலைகளை விட்டுவிடுங்கள். விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

இன்று பணியில் அதிக வளர்ச்சியை பெற மாட்டீர்கள். குறித்த நேரத்தில் பணியை முடிப்பது இன்று சற்று சிரமமாக காணபப்படும்.

உங்கள் துணையிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்வீர்கள். இந்த உணர்வு நிஜமானதல்ல. உங்கள் துணை உங்களிடம் அன்பை வெளிப்படுத்துவார்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும்.அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வது கூட கடினமானதாக இருக்கும்.




இன்று முற்போக்கான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். இன்று அமைதியான மனநிலையும் திருப்தியும் காணப்படும்.

உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணியில் உங்கள் தனித்துவம் வாய்ந்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையை உங்கள் நண்பரின் இல்லத்துக்கு அழைத்துச் செல்வீர்கள். உங்கள் இருவருக்குமிடையேயான நல்ல புரிந்துணர்வுக்கு இது உதவும்.

இன்று திருப்திப்படும் அளவில் போதுமான பணம் இருக்கும்.பணம் சேமிக்கும் ஆற்றலும் இன்று காணப்படும்.

இன்று ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




சொத்து சம்பந்தமாக குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு அதன்படி நடந்துகொள்ள வேண்டும். சோர்வு நிலை காணப்படும். யோகா செய்வதன் மூலம் சோர்வு விலகி தெளிவு கிடைக்கும்.

அதிக பணிச்சுமை மற்றும் ஓய்வில்லாத உழைப்பு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிச்சுமையை சமாளிக்க சிறந்த திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் உங்கள் தைரியம் குறைந்து காணப்படும். நீங்கள் உங்கள் கருத்துக்களை வெளிப்படையாகப் பேச வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி வருத்தத்தை தரும் வகையில் காணப்படும். பணஇழப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்றுமனச்சோர்வுடன்காணப்படுவீர்கள் அன்றாட செயல்களில் யதார்த்தமான அணுகுமுறை வேண்டும். ஏமாற்றங்களை எதிர்கொள்ளவும் சமாளிக்கவும் தயாராக இருங்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஒத்துழைப்பு இன்று கிடைக்காது. அதிக வேலைகள் கவலைகளை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை தேவை. இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உதவும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். பணஇழப்பு ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும்.

வயிற்று வலிக்கான அறிகுறி காணப்படுகின்றது.அதனால் உபாதைகள் ஏற்படும். அதிகஅளவில் தண்ணீர் பருக வேண்டும்.



திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் எம்.பியின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட கிண்ணியா பூவரசந்தீவு வடசல் பாலத்தை நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று (5) பார்வையிட்டார்.

**(எஸ். சினீஸ் கான்)**

